T. 19376

சந்மார்க்கபோதினி.

(எட்டாம் பாகம்.)

ஹைஸ்கூல்

ஐந்தாவது வகுப்புக்கு ஏற்றது.

76

05

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர்

வித்தியாநுபாலன அச்சகம்

சென்னை.

விலை அணா 2.

சந்மார்க்க போதினி.

(எட்டாம் பாகம்.)

ஹைஸ்கூல்

ஐந்தாவது வகுப்புக்கு ஏற்றது.

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1953.

விலை அணா 2.

முகவுரை.

கல்வியால் மனிதர் பூரண பலனை அடைவதானால் அக் கல்வி ஈசுர ஞானத்தையும் பத்தியையும் பிறப்பிக்கவும் வளர்க்கவும் தக்கதாக அமைக்கப்பட வேண்டுமென்பது உலகெங்கும் பெரும்பான்மை கற்றோருடைய அபிப்பிராயமாகத் திகழ்கின்றது. ஒரே சமய உணர்ச்சியுள்ள மாணவர் ஒருங்கு சேர்ந்து கற்கும் வித்தியாசாலைகளிலே சமயக் கல்வியை விரும்பியவண்ணம் அமைப்பது இலகு. ஆயினும் இந்நாட்டிலே பல்வேறு சமயத்தினராகிய மாணவர் கற்கும் வித்தியாசாலைகளிலே ஒவ்வொரு சமயத்தவர்க்கும் அவரவருக்கேற்ற சமயக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்வது இலகுவன்று. ஆதலினால் சமயக் கல்வியை ஊட்ட இயலாத நிலையில், எல்லாச் சமயத்தவரும் அங்கீகரிக்கக்கூடிய சன்மார்க்க போதனைக் கல்வியையாயினும் இவ்வித்தியாசாலைகளில் ஊட்டுதல் பொதுவாய், சமூகவாழ்க்கைக்கு ஓரளவிற்கு நற்பயனை அளிக்குமென்ற அபிப்பிராயத்தைப் பெரியோர் ஏற்றுக்கொள்ளுவார்களென நம்புகிறேன். தமிழிலே நீதிநூல்கள் மலிந்து பொலிந்திருந்தபோதிலும், தற்கால அரசினர் கல்வித்திட்ட முறைக்கேற்ப, மாணவருடைய வயதுக்கும் வகுப்புக்கும் அறிவுத்தகைமைக்கும் ஏற்றவாறு அவைகள் வகுக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலினால் நீதிநூல்திரளில் சிலவற்றை ஆராய்ந்து, சாதி, சமய, தருக்க சம்பந்தமான பாகங்களை விலக்கி வகுப்பு வளர்ச்சிக்கு ஏற்றவாறு தேர்ந்து வகுப்புமுறையில் தொகுத்துப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

ஆராயப்பட்ட நூல்களாவன:—ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களால் செய்யப்பட்ட பாலபாடம் இரண்டாம் புத்தகமும், அவராலே உரை செய்யப்பட்ட ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, முதலிய நூல்களிலமைக்கப்பட்டிருக்குந் தாற்பரியங்களும், இன்னும் நாலடியார், நீதிவெண்பா, நீதிநெறிவிளக்கம், திரிகடுகம், நான்மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம், திருக்குறள் முதலிய நூல்களில் சில பாகங்களுமாம். இவைகளைச் சேர்க்கவும் தொகுக்கவும் இவ்வித்தியாசாலையில் கடமையாற்றும் சில தமிழ்ப்பண்டிதர் செய்த உதவிக்கு நன்கு நன்றி பாராட்டுகின்றேன்.

இப்பிரசுரங்கள் ஒவ்வொரு வகுப்புக்குத் தேவையான அளவில் தனிப்பாகங்களாகவும் எல்லாப் பாகங்களுஞ் சேர்த்துக் கட்டப்பட்ட ஒரே புத்தகமாகவும் இவ்வித்தியாசாலையிலும், சென்னை தங்கசாலைவீதி 300-நெம்பர், புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தனிப் பாகம் விலை அணா 2. முழுத்தொகுதி ரூபாய் ஒன்று.

சிதம்பரம்.
நாவலர் சைவப்பிரகாச
வித்தியாசாலை.
நந்தனஞ சித்திரைமீ.

G. சுப்பிரமணியம்.
தருமபரிபாலகர்.

சந்மார்க்க போதினி.

எட்டாம் பாகம்.

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை.

இ-ள். தருமத்தையும் செல்வத்தையும் இன்பத்தினையும் முத்தியினையும் கொடுத்து; ஊர்க்குப் புறத்தே குற்றமற்ற புகழையும் நிலை நிறுத்தி; வரக்கடவதாகிய கவலை ஒன்று வந்த விடத்தும் உதவிபுரியும்; கல்வியினு மேம் பட்டுச் (சிறந்த வேறு ஒன்று) இல்லை, சில வாழ்நாட்களையுடைய (மக்கள்) உயிர்களுக்கு பொருந்திய துணையாக.

முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க—சிற்றுளியாற்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால்.

இ-ள். எல்லாவற்றையும் நன்கு கற் றறிந்தவர்கள் இலர்; (ஆதலால்) யாவற்றையும் (யாம்) கற்றுவிட்டோம் என்று கருதி, செருக்கு அடைதலை ஒழிக; (ஏனெனில்), சிறு உருவின தான கல்லுளியினால் பெரிய மலைகளும் உடை

டட்டுவிடும்; (ஆனால் அம்பலைகளோ) கனமான காதணிகளையுடையவளே! கொல்லனுடைய உலைக்களத்துள்ள (பேருருவினதாகிய) சம்மட்டியினால் உடைபடா.

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோ ரணிகலம் வேண்டாவாம்—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகு செய்வார்.

இ-ள். கல்வியறிவுடையோர்க்கு (அக்) கல்வியினாற்பெற்ற அறிவே, (அவரால் விரும்டப்படும்) ஆபரணமாம்; அதனை அன்றி பிறிது ஓர் ஆபரணமும் அவரால் வேண்டப்படுவதில்லையாம்; முழுவதும் பருத்தமணிகளால் ஆகிய ஓர் ஆபரணத்திற்கு (மற்றுமோர்) ஆபரணம் வேண்டப்படுவதில்லை; யார்தாம் அழகினுக்கு அழகுசெய்யப்புகுவார்கள்? (ஒருவருமிலர்)

வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் றொடங்கல்—கருந்தனங்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல்.

இ-ள். (நெடும்பகல்) உழைத்துழைத்து தாம் கற்றுணர்ந்த நூற் பொருள்களை, (பன்முறையும் பயின்று தெளிந்து) பேணிக்கொள்ளாமல், மீண்டும் (விரும்பி) வருந்தி, வேறு சில நூல்களை கற்க புகுதல், பெரும்பொருள் கையினிடத்ததாயிருந்தும், (அதனைக்) கொண்டு சென்று எறிந்துவிட்டு, பன்முறையுங் கையினு

லும் கருவியினுலும் அரித்தரித்துச் சேர்த்தலைப் போல, உடல் தளர்ந்து, மீண்டும் பொருளீட்டுதலை யொக்கும்.

கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே யீர்ங்கவியாச்—சொல்வளம்
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்துஞ்
செல்வமு முண்டு சிலர்க்கு.

இ-ள். தாம் கற்ற கல்வியறிவே கற்புள்ள மனையாட்டியராகவும், அம்மனையாட்டியரால் (தாம்பெற்ற) அருமருந்தன்ன பிள்ளையே (தாமியற்றிய) இனிய செய்யுளாகவும், சொல்வன்மையே வளப்பந் தரும் செல்வப் பொருளாகவும் (இருப்பதோடு), பெருமை நிறைந்த பேரவை (யில் இடம்பெற் றமர்ந்து), அணி செய்விக்கும் தனிச் சிறப்பும் உளவாக அமைந்து கிடப்பது ஒருசிலர்க்கேயாம்.

தொடங்குங்காற் றுன்பமா யின்பம் பயக்கும்
மடங்கொன் றறிவகற்றுங் கல்வி—நெடுங்காமம்
முற்பயக்குஞ் சின்னீர வின்பத்தின் முற்றிழாய்
பிற்பயக்கும் பீழை பெரிது.

இ-ள். கற்கப்புகுங்காலத்திலே துன்பம் விளைப்ப (துபோல்வ)தாகி, (பின்னர்) இன்பத்தை விளைக்கும் அறியாமையை நீக்கி, அறிவினைப் பெருகச் செய்யும் கல்வி; மிக்க காமமோ, தொடக்கத்தில் விளைக்கின்ற சிறிது பொழுதே இருக்குந் தன்மையையுடைய இன்பத்தைக் காட்டிலும், தொழிலலம் முற்றிய அணிகலனுடையவளே! பின்னர் விளைக்கின்ற (நெடுங்

காலந்தங்கி வருத்துவதாகிய) துன்பம் பெரிய தாகும்.

கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படு—மில்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றமுந்
தலைவணங்கித் தாழப் பெறின்.

இ - ள். கல்விச் செல்வம், பொருட்செல்வம் என்னும் இருசெல்வங்களும் (உண்மைச்) செல்வங்கள் என்றே (அறிவுடையோரால்) பாராட்டப்படும்; (எப்போதெனில்) (அவ்விரு செல்வங்களும்) தம்மிடம் இல்லாதார் (அவ்விரண்டையும் பெறுதலின்கண் தத்தமக்குள்ள) குறைபாடுகளை யெடுத்துச் சொல்லி, (இருவகைச் செல்வமும் படைத்த) தம்மெதிரில் நிற்றலை யொப்ப, (இரு செல்வங்களும் படைத்த) தாங்களும் தலையால் வணங்கி பணிதலிய லுமாயின்.

தன்னை வியப்பிப்பான் றற்புகழ்த றீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றல்—தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்ப
நயவாமை யன்றே நலம்.

இ - ள். தன்னை (பிறர்) நன்கு மதிக்கும்படி செய்யக்கருதி, (ஒருவன்) தன்னைத்தானே பெருமைப்படுத்திப் புகழ்ந்து கொள்ளுதல் விளக்கை தண்ணீரை வார்த்து எரியச் செய்தலையொக்கும்; தன்னை (தானே) பெருமைப் படுத்திக் கூறிக்கொள்ளாமை அல்லவோ நன் மதிப்பாகும்; (வினைப்பயனால் தனக்கு இன்பம் வந்துழி அந்த) இன்பத்தை (அனுபவியா

நின்றே மனத்தான்) விரும்பாத நிலை அல்லவோ இன்பத்துள் இன்பமாகும்!

பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்ப தொன்றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

இ - ள். மற்றவர்களால் நன்கு மதிக்கப் படுதலை விரும்பும் ஒருவன் எவ்விடத்தும் மறந்துவிடாமல் நோன்பைப்போல் இயற்றி வருவதாகிய ஒரு செயல் உள்ளது; (அஃதாவது) மற்றையோருடைய பெருமைகள் எல்லாவற்றையும் பரக்க எடுத்துக் கூறி, (அவர்களுடைய) குறைபாடுகளை மட்டும் அங்ஙனம் எடுத்துக்கூறுதலைத் தவிர்ந்து, எல்லோரிடத்திலும் பணிவை (வெளிப் படுத்துஞ்) சொற்களையே சொல்லுதலாம்.

குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையுந் தாயும்—அறவோர்க்
கடிகளே தெய்வ மனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூ ணிறை.

இ - ள். நற்குடிப் பிறந்த (கற்புடை) நங்கைக்கு தெய்வமாவான் கணவனேயாம்; மக்களுக்கு (தெய்வமாவார்) அவர்களுடைய தந்தையும் தாயுமேயாம்; அற நிலை நிற்போர்க்கு, (அவர்தம்) ஞானகுருவே தெய்வமாவார்; யாவருக்கும் (ஒருபடித்தாக) தெய்வமாக விளங்குபவன் இலை போன்ற முக வடிவையுடைய பசிய பொன்னாலாகிய அணிகளைத் தரித்த அரசனேயாம்.

முன்னின் றொருவன் முகத்தினும் வாயினும்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப்—பின்னின்
றிழித்துரைக்குஞ் சான்றோரை யஞ்சியே தேவர்
விழித்திமையா நின்ற நிலை.

இ-ள். ஒருவனுக்கு எதிரே நின்று முகத்தினாலும் வாயினாலும் கல்லும் உருகும்படியாகக் கனிந்து பேசி அவனைக் காணாதவிடத்து இகழ்ந்து பேசும் சான்றோரை யஞ்சியே தேவர்கள் விழித்தகண் இமையாமல் இருக்கின்றார்கள். [சான்றோர் - இகழ்ச்சிக்குறிப்பு.]

ஒளியும் ஒளிசான்ற செய்கையுஞ் சான்றோர்
தெளிவுடையர் என்றுரைக்குந் தேசும்—களியென்னும்
கட்டுரையாற் கோதப் படுமேல் இவையெல்லாம்
விட்டொழியும் வேறாய் விரைந்து.

இ-ள். கள்ளுண்பவனிடம் புகழ் புகழுக்கேதுவாகிய செய்கைகள் மற்றுமுள்ள தேசங்கள் எல்லாம் நில்லாமற் போய்விடும்.

ஓதலும் ஓதியுணர் தலும்சான் றோரால்
மேதை யெனப்படு மேன்மையும்—சூது
பொருமென்னுஞ் சொல்லினாற் புல்லப் படுமேல்
இருளா மொருங்கே யிவை.

இ-ள். சூதாடுபவனிடம், கல்வியும் கற்றபடி ஒழுகலும் அறிவுடையோரால் புகழப்படும் சொல்லும் நிற்கமாட்டா. [மேதை - அறிவுடையோன்.]

தனக்குத் தகவல்ல செய்தாங்கோர் ஆற்றல்
உணற்கு விரும்புங் குடரை—வனப்புற

ஆம்பற் றூள்வாட லேபோல வகத்தடக்கித்
தேம்பத்தாங் கொள்வ தறிவு.

இ-ள். தனக்குத் தகுதியற்ற காரியங்களைச் செய்து தீய வழியால் உண்ணுதற்கு விரும்புங் குடரை அழகுற அல்லித்தண்டு தண்ணீர் இல்லாத காலத்து வாடலேபோல் மனத்தை அடக்கி வாடச்செய்வதே அறிவுடையோர் செய்கையாகும். [தேம்ப - மெலிய.]

சாவாய்நீ நெஞ்சே சல்லிய வென்னைநீ
ஆவதன்க ணென்றூனு நிற்கொட்டாய்—ஓவாதே
கட்டழித்துக் காமக் கடற்கென்னை யீர்ப்பாயேல்
விட்டெழுங்கால் என்னுவாய் சொல்.

இ-ள். நெஞ்சே! நீ இறப்பாய், கலக்கமுடைய என்னை மேலோங்குவதில் சிறிதும் நிற்கும்படி செய்ய வொட்டாய்; என் கட்டுப்பாட்டைக் கெடுத்துக் காமக்கடற்கு இழுத்துச் செல்வாயேயானல் இவ்வுடம்பினின்றும் உயிர் செல்லுங்கால் நீ எவ்வாருவாய் சொல். [சல்லியம் - கலக்கம்.

இம்மை அடக்கத்தைச் செய்து புகழாக்கி
உம்மை யுயர்கதிக் குய்த்தலால்—மெய்ம்மையே
பட்டாங் கறமுரைக்கும் பண்புடை யாளரே
நட்டா ரெனப்படு வார்.

இ-ள். இம்மைக்கு அடக்கத்தையும் புகழையும் உண்டாக்கி, மறுமைக்கு முத்திக்குச் செலுத்தும் உண்மையான அறமுரைக்கும் பண்புடையாரே நட்பாளர் எனப்படுவார்.

நட்டா ரெனப்படுவார் நாடுங்கால் வையத்துப்
பட்டாம் பலபிறவித் துன்பமென்—றெட்டி
அறநெறி கைவிடா தாசாரங் காட்டிப்
பிறநெறி பேர்க்கிற் பவர்.

இ-ள். பூமியின்கண் ஆராயுமிடத்து நட்டாரென்று சொல்லப்படுவார், பல பிறவியால் துன்பம் உண்டாம் என்றறிந்து அறநெறியையும் ஒழுக்கத்தையும் போதித்துப் பாவ வழியிற் செல்லாது நிற்பவராம்.

நட்டாரை வேண்டி னறுமென் கதுப்பினுய்
விட்டாரை யல்லாற் கொளல்வேண்டா—விட்டார்
பொதிசுணங்கு மென்முலைப் பொன்னனுய்! உய்ப்பர்
மறிதர வில்லாக் கதி.

இ-ள். இலக்குமியை யொத்தவளே! நட்புக்கொள்ள வேண்டின் பற்றற்றவரோடு கொள்ளல்வேண்டும். அவர் திரும்பப் பூமியில் பிறவாத நற்கதிக்குச் செல்லும்படி செய்வர்.

கழியும் பகலெல்லாங் காலை யெழுந்து
பழியொடு பாவம் படாமை யொழுகினுர்
உய்க்கும் பொறியாரை நாடியுழி தருமே
துய்க்கும் பொருளெல்லாந் தொக்கு.

இ-ள். தினந்தோறும் காலையில் எழுந்து பழியும் பாவமும் உண்டாகாவண்ணம் ஒழுகுகின்றவர்களை அனுபவிக்கக்கூடிய பொருள்களெல்லாம் சென்றடையும்.

காய வுரைத்துக் கருமஞ் சிதையாதார்
தாயாரோ டொவ்வாரோ தக்கார்க்கு—வாய்பணிந்

துள்ளமுருக வுரைத்துப் பொருள் கொள்வார்
கள்வரோ டொவ்வாரோ தாம்.

இ - ள். வருந்தும்படி சொல்லிக் கருமத்தைக் கெடாதவர்கள் தாயை யொப்பார்கள். தகுதியுடையவர்க்கு வாய்புதைத்து உள்ள முருகும்படி உரைத்துப் பொருள் சம்பாதிக்கிறவர்கள் திருடரோடு ஒப்பர்.

குற்றத்தை நன்றென்று கொண்டு குணமின்றிச்
செற்ற முதலா வுடையவரைத்—தெற்ற
அறிந்தாரென் றேத்து மவர்களைக் கண்டால்
துறந்தெழுவர் தூய்க்காட்சி யார்.

இ - ள். குற்றங்களை நல்லவையெனக் கொண்டு குணமில்லாமல் கோபம் முதலிய வுடையவரை எல்லாம் அறிந்தவரென்று வணங்குவோரைக் கண்டால் பரிசுத்தமான கொள்கையுடையவர்கள் அகன்று நீங்குவார்கள்.

கொன்று னுகருங் கொடுமையை யுண்ணினைந்
தன்றே யொழிய விடுவானேல்—என்றும்
இடுக்கணென வுண்டோ இல்வாழ்க்கைக் குள்ளே
படுத்தானுந் தன்னைத் தவம்.

இ - ள். ஒன்றனுயிரைக் கொன்று புலாலை நுகரும் கொடுமையை நினைந்து விட்டு விடுவானேயானால் அவனுக்கு ஒருபொழுதும் துன்பம் இல்லை; இல்லறத்தாருள் தவஞ்செய்தவனாவான்.

தம்புண் கழுவி மருந்திடுவர் தாம்பிறிதின்
செம்புண் வறுத்த வறைதின்பர்—அந்தோ

நடுநின் றுலக நயனிலா மாந்தர்
வடுவன்றே செய்யும் வழக்கு.

இ-ள். அறிவில்லா மனிதர்கள் தம் புண்ணைக்கழுவி ஆறும்படி மருந்திடுவார்கள். பிறவற்றின் புண்ணிறைந்த புலாலை வறுத்துத் தின்பார்கள்; இந்த நடுவு நிலைமையில்லாவழக்கு குற்றமாகும். அந்தோ! நாம் என் செய்வோம். [வடு - குற்றம். அந்தோ - ஐயோ.]

அறங்கூறு நாவென்ப நாவும் செவியும்
புறங்கூற்றுக் கேளாத வென்பர்—பிறன்றாரத்
தற்றத்தை நோக்காத கண்ணென்ப யார்மாட்டும்
செற்றத்தைத் தீர்ந்ததா நெஞ்சு.

இ-ள். பெரியோர் அறம் கூறும் நாவினையே நாவென்றும் புறங்கூற்றுக் கேளாத செவியினையே செவியென்றும் பிறன் மனைவியைப் பாராத கண்ணையே கண்ணென்றும்; கோபந்தீர்ந்த மனத்தினையே மனமென்றுங் கூறுவார்கள்.

கல்லான் கடைசிதையும் காமுகன் கண்காணுன்
புல்லான் பொருள்பெறவே பொச்சாக்கும்—நல்லான்
இடுக்கணும் இன்பமும் எய்தியக் கண்ணும்
நடுக்கமும் நன்மகிழ்வு மில்.

இ-ள். கல்லாதான் கணம் முடிவு அழிந்து விடும், காமுகன் கண்ணில்லாதவன் ஆவான், கீழ்மகன் பொருள் கிடைக்கவே தன்னை மறந்து விடுவான், நல்லவன் துன்பமும் இன்பமும் வந்தபோதும் துக்கமும் மகிழ்வும் அடைய மாட்டான்.

தனக்குத் துணையாகித் தன்னை விளக்கி
இனத்துள் இறைமையுஞ் செய்து—மனக்கினிய
போகந் தருதலாற் பொன்னே யறத்துணையோ
டேகமா நண்பொன்று மில்.

இ-ள். ஒருவனுக்குத் துணையாகி விளக்க முறச் செய்தும், கூட்டத்துள்ளே தலைமையாகச் செய்தும், மனசுக்கினிய போகந் தருதலால் இலக்குமியை யொத்தவளே! அறத்திற்குச் சமமான நட்பு உலகத்தில் யாதொன்றுமில்லை.

ஈட்டிய வொண்பொருளும் இல்லொழியும் சுற்றத்தார்
காட்டுவாய் நேரே கலுழ்ந்தொழிவர்—மூட்டு
மெரியின் உடம்பொழியும் ஈர்ங்குன்ற நாட
தெரியி னறமே துணை.

இ-ள். குளிர்ச்சி பொருந்திய மலை நாட்டையுடையவனே! சம்பாதித்த பொருளும் வீட்டோடு ஒழியும், உறவினர்கள் இடுகாட்டினிடத்தே நேரே அழுது நீங்குவர், மூட்டப்பட்ட அக்கினியின்கண்ணே உடம்பு எரிந்து அழியும், ஆதலால் ஆராயின், ஒருவனுக்குத் துணை அறமாகும். [காடு - இடுகாடு.]

இன்சொல் விளைநிலமா யீதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை யெருவட்டி
யன்புநீர்ப் பாய்ச்சி யறக்கதிர் ஈன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.

இ-ள். இனிய சொல்லே விளைநிலமாகவும், தானஞ் செய்தலே விதையாகவும், உண்மையே எருவாகவும், அன்பே நீராகவுஞ்

செய்து கடுஞ்சொல்லாகிய களையை நீக்கி, அற மாகிய கதிரைப் பெறக்கூடிய பயிரை இளமையி லேயே நீ செய்வாய்.

காலைச் செய்வோமென் றறத்தைக் கடைப்பிடித்துச்
சாலச் செய்வாரே தலைப்படுவார்—மாலைக்
கிடந்தா னெழுதல் அரிதால்மற் றென்கொல்
அறங்காலை செய்யாத வாறு.

இ-ள். இளமையிலேயே அறத்தைச் செய்வோமென்று உறுதியாக மிகவுஞ் செய்கின் றவர்களே மேம்பட்டவராவார்கள், இரவில் நித்திரை செய்யப்புகுந்தால் காலையிலெழுதல் அருமை; அதனால் அறத்தை இளமையிலேயே செய்யாதது என்ன காரணம். [எழுதல் - துயி லெழுதல்.]

சென்ற நாளெல்லாஞ் சிறுவிரல்வைத் தெண்ணலாம்
நின்றநாள் யார்க்கு முணர்வரிது—என்றொருவன்
நன்மை புரியாது நாளுலப்ப விட்டிருக்கும்
புன்மை பெரிது புறம்.

இ-ள். கழிந்த நாள்களெல்லாவற்றையும் சிறிய விரல்களைக் கொண்டு எண்ணி விடலாம்; மேலிருக்கும் நாளைச் சொல்லுதல் யார்க்கும் அரிய செயலாகும். ஆதலால், இளமையி லேயே தருமஞ் செய்யாமலிருப்பது அறியாமை யாம். [உலப்ப - கழிய.]

பிரகடன பத்திரம்.

	ரு.	அ.	பை.
முதற்பாலபாடம்	0	3	0
இரண்டாம்பாலபாடம்	0	5	0
மூன்றாம்பாலபாடம்	0	10	0
நான்காம்பாலபாடம்	1	4	0
நான்காம்பாலபாடம் குறிப்புரையும் அப்பியாச வினாக்களும்	1	12	0
முதற்சைவவினாவிடை	0	3	0
இரண்டாஞ்சைவவினாவிடை	0	10	0
திருக்குறள் மூலம்	0	8	0
திருவள்ளுவர் பரிமேலழகருரை	5	0	0
நன்னூல் மூலம்	0	3	0
நன்னூல் விருத்தியுரை	3	8	0
நன்னூற்காண்டிகையுரை	3	8	0
இலக்கணச்சுருக்கம்	1	0	0
இலக்கணவினாவிடை	0	3	0
இலக்கணக்கொத்துரை தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கணவிளக்கச் சூறாவளி	1	[illegible]	[illegible]
தொல்காப்பியம் சேனாவரையம்	3	[illegible]	[illegible]
பெரியபுராண வசனம்	2	[illegible]	[illegible]
சிதம்பரமான்மியம்	0	[illegible]	[illegible]
சிவஞானபோதம் சிவஞானமுனிவர் சிற்றுரை	1	4	0
திருக்கோவையாருரை	3	0	0
ஆறுமுகநாவலர் சரித்திரம்	1	4	0

T1
R

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள்,
வித்தியாநுபாலனயந்திரசாலை,
நெ. 300, தங்கசாலை வீதி, சென்னை.